தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௩	மலர்
௩௮	சுபகிருது, ஆவணி. 1962 செப்டம்பர்.	ரு.

தமிழவேள் அவர்கள் சிறப்பு மலர்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களது வரலாறு.

(சிவ. சண்முகசுந்தரம் கரந்தை)

தமிழவேள் அவர்களது வரலாற்றிலே ஒரு சிறு பகுதியை எழுத எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றி. இப் பணியைச் செய்வதற்கு எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. ஆனல், தமிழவேள் அவர்கள் 'பேரருங்களிறு' போன்றவர்கள். வாரணம் ஒன்றைச் சில குருடர் தடவிப்பார்த்தனர்; காலைத் தடவிப்பார்த்தவர் யானையின் உருவம் உரலைப்போன்றது என்றனர், துதிக்கையைத் தடவிப்பார்த்தவர் யானை உலக்கைபோன்ற உருவமுடையது என்றனர், வாலைத் தடவி யவர் ஆலம் விழுதுபோன்றது யானை என்றனர், காதைத் தடவியவர் முறம்போன்றது யானை என்றனர், உடலைத் தடவியவர் குன்றம்போன்றது யானை என்றனர். அவர் களைப்போல தமிழவேளாகிய யானையைப் பற்றி எழுதுகிற வர்கள் அவரவர் கண்டவற்றை எழுதக்கூடுமே யல்லாது முழு வரலாற்றையும் எழுதிவிடக்கூடுமென்று கொள்ளமுடி யாது. அவர்களது வாழ்க்கை உலகியலில் பல துறைகளி லிலே இணைந்துள்ளது. எல்லாத் துறைகளிலும் அவர் களது தொடர்பறிந்து எழுதுவதென்பது இயலாத செய லாகும்.

நான் அவர்களின் எதிர்வீட்டினன். நான் ஓர் அடக்க மான பிள்ளை. படிப்பில் ஆர்வங்கொண்ட மாணவன் என்ற முறையிலே அவர்கள் என்னிடம் அன்பும் மதிப்பும் கொண் டிருந்தார்கள். அவர்கள் எனக்குத் தலைவர், புரவலா, எனது

அரசியல் ஆசிரியர். அன்னாரது வரலாற்றிலே எனக்குத் தெரிந்த சிலவற்றை எழுதுவதிலே நான் மகிழ்ச்சியும் பெருமையுங்கொள்கிறேன்.

2.

தமிழவேள் அவர்கள் ஆங்கில அரசாங்கத்தில் தாசில்தார் அலுவல் பார்த்துவந்த வேம்பப்பிள்ளை அவர்களின் மக்களுள் முதன் மகனாவார். அவரது இளவலே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த இராதாகிருட்டினனார். மற்றோரிளவல் இளமையிலேயே மறைந்தார்கள். அவருக்கு ஒரு தமக்கையும், தங்கை ஒருவரும் உண்டு. தமக்கை ஆண்டாளம்மாள் என்னும் இராசாமணியம்மாள் என்பவர். கரந்தை வணிகர் வை இராமசாமிப் பிள்ளையை மணந்து கரந்தையிலேயே வாழ்ந்து மறைந்தார்கள். தங்கை சண்பகவல்லி அம்மாள் என்பவர்கள் காந்தியார் ஆணைப்படி ஆங்கில அரசின்கீழ் பொதுப்பணித்துறையில்தான் ஏற்றிருந்த உதவிப் பொறியாளர் (Assistant Engineer) அலுவலை உதறித்தள்ளி நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்ட திரு. S. A. சாம்பசிவம் பிள்ளையவர்களின் துணைவியார் ஆவார்கள்.

இளமையிலேயே தந்தை தாயரை இழந்த தமிழவேளவர்கள் கரந்தைப் பெருவணிகர் வீ. சுப்பராய பிள்ளையவர்களாலும் அவர்தம் துணைவியாரும் சிற்றன்னையுமான பெரியநாயகியம்மாள் அவர்களாலும் பேணி வளர்க்கப்பெற்று வந்தார்கள்.

தஞ்சை தூயபேதுருக் கல்லூரியில் (S. P. G. College) பட்டம்பெற்றார்கள். ஆங்கிலத்தில் தஞ்சைப் புலியென்று பெயர்பெற்ற ஆங்கிலப் புலவர் (Tiger of Tanjore) சண்முகம் பிள்ளை, அறிவியல் மேதை முத்துக்குமர மூப்பனார், தமிழ்ப் புலவர் ஐயாசாமிப் பிள்ளை ஆகியோர் அவர்களின் ஆசிரியர்கள்.

கல்லூரிப்படிப்பு முடிந்தபின் தஞ்சை தண்டல் நாயகம் (Collector) அலுவலகத்தில் எழுத்தாளர் (Clerk) அலுவல் பார்த்துவந்தார்கள். அந்த அலுவல் அவர்களது இயல்புக்கு ஏற்றதாக இல்லை. அதைவிடுத்துச் சென்னை சென்று சட்டக்கல்லூரியிற்சேர்ந்து B. L. பட்டம்பெற்றுத் திரும்பி வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டார்கள்.

பஞ்சாபகேசன், மாணிக்கவாசகம், சிங்காரவேல் என்ற மூன்று பிள்ளைகளைப்பெற்ற தம் துணைவியாரை தனது இளமையும் முதுமையுமல்லாத ஓர் பருவத்தில் இழந்தார்கள். வேறு மணம் செய்துகொள்ளாது தம் எண்ணம் செயல்களை யெல்லாம் பொதுப் பணிக்கேயாக்கி நெறியோடு வாழ்ந்து வந்தார்கள்.

தமிழவேள் துணைவியாரை இழந்தபின் அவருக்குக் குடும்பக் கவலையே இல்லாமல் செய்து பொதுப் பணிக்குத் துணைபுரிந்தவர் இரு அம்மையார்கள். அவர்களுள் ஒருவர் அவரது சிற்றன்னை மற்றொருவர் அவரது சிறிய தந்தையார் மகனாகிய வீ. சு. சிதம்பரம் பிள்ளையவர்களின் துணைவியார் கனகவல்லியம்மாள் என்ற பெருங்குணப் பெருமாட்டியார். தமிழ்வேளவர்கள் குறிப்பிட்ட காரியங்களைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்யும் நியதியுடையவர்கள். அதற்கு எவ்விதத் தடங்கலோ தவக்கமோஇன்றிப் பார்த்துக்கொண்டவர்கள் அப்பெருமாட்டியார். தமிழவேளவர்கள் வாய்திறந்து சொல்லாமலே குறிப்பறிந்து நடந்தவர்கள் அப்பெருமாட்டியார்.

தமிழவேளவர்கள் தனியேஅமர்ந்து உணவுகொண்டதே இல்லை. நண்பர்களோ, புலவர்களோ உடனிருப்பார்கள். உணவு நேரம் வந்ததும் உடனிருப்பவர்களை அழைத்துக் கொண்டு உணவறைக்குச் செல்வார். அங்கு உடனிருப்போர் எல்லோர்க்கும் இலைபோட்டுப் பரிமாறப்பட்டிருக்கும் அப் பெருமாட்டியாரால்.

அவர்கள் குடும்பத்தில் குதிரைவண்டி ஒன்றுண்டு, தமிழவேள் நீதிமன்றத்துக்குச் செல்ல அவ்வண்டிவந்து காத்திருக்கும். என்றாவது வண்டி வரவில்லையென்றால் அவ்வண்டிக்காக அவர் காத்திருப்பதில்லை. விருவிருவென்று நடந்து வண்டிப்பேட்டைக்குச் சென்றுவிடுவார்கள். அப்படிச் செல்வதுவே வண்டி தாமதித்துவரக் காரணமானவர்களுக்கு அவர் விதிக்கும் தண்டனையாக இருக்கும்.

தினமும் காலை 4மணிக்குமுன்பே துயிலெழுவது வழக்கம். வழக்குகள் பற்றிய குறிப்புகள் எழுதல் (தாலுக்கா போர்டு) தாலுக்காக் கழகம், மாவட்டக் கழகம் பற்றிய அலுவல்கள் எல்லாம் விடியுமுன் பார்த்துவிடுவார்கள். உடனே எழுந்து கரந்தைத் தமிழ்ச் சங்க திக்கற்ற மாணவர் இல்லத்துக்குச் செல்வார்கள். சங்கத்தின் தோட்டத்தைச் சென்று பார்வை யிடுவார்கள். வீடுதிரும்பியபின் குளித்தல், பூசனை, சிற்றுண்டி

ஆயவற்றை முடித்துக்கொண்டு அலுவல் பார்க்கும் அறையில் வந்து அமர்வார்கள். வழக்குகள் தந்தவர்கள், தாலுக்கா கழக ஆட்சியில் ஈடுபட்டவர்கள், புலவர்கள் ஆயவரிடமும் மற்றையோரிடமும் பேசுகின்ற நேரம் அதுவே. கடிதங்களுக்கு உடனுக்குடனே மறுமொழி விடுவார்கள். காலே 10 மணிக்கெல்லாம் உணவு, பின்னர் நீதி மன்றத்துக்குப் புறப்பாடு, மாலையில் சங்க அலுவல்கள். இரவில் 9 மணிக்கெல்லாம் படுத்துவிடுவார்கள்.

அவர்கள் அலுவலில் ஈடுபட்டிருக்கும் சமயம் யார் என்ன இரைச்சல் செய்தாலும் அது அவர்களது கவனத்தைக் கலைப்பதில்லை.

இளையோராயினும், முதியோராயினும் தன்கீழ் பணியாற்றும் அலுவலர்களாயினும் பிறரோடாயினும் அவரவர்களோடு பழகவேண்டிய முறைப்படி பழகுவார்கள். அலுவலகக் காரியங்களைக் கவனிக்கும்போது மிகக் கண்டிப்பான முறையிலே பேசுவார்கள்.

3.

தமிழவேள் அவர்கள் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டபோது அத்தொழிலை மேற்கொண்ட தமிழர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. இவர்கள் காலத்துத் தமிழ் வழக்குரைஞர்கள் திருவாளர், ஐ. குமாரசாமிப் பிள்ளை B. A., திருவாளர், A. T. பன்னீர்ச்செல்வம் Bar-at-Law திருவாளர், மருதமுத்து மூப்பனர் B. A., B. L., ஆகியவர்களே. பின்னர் திரு. அளகிரிசாமி நாயுடு, திரு. M. வேங்கடாசலம் பிள்ளை B. A., B. L., முதலியவர்கள் அத்தொழிலில் சேர்ந்தார்கள்.

தமிழவேள் அவர்கள் தனக்கு நியாயமானது என்று பட்ட வழக்குகளைத்தான் ஒப்புக்கொண்டு நடத்துவார்கள். நியாயமற்ற வழக்கென்று தெரிந்தால் அதனை ஏற்று நடத்த மாட்டார்கள். அதனல் அவர்களிடம் தொடக்கத்தில் அதிக வழக்குகள் வருவதில்லை; என்றாலும் நீதிபதிகளுக்கு இவர்களிடம் நல்ல மதிப்பும் மரியாதையும் நம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டது. சட்டத்திலே மிக வல்லுநர்; வழக்குகளைக் கூர்ந்து கவனித்து நடத்துவார்கள்; திறம்பட வாதிப்பார்கள். நாட்கள் செல்லச் செல்ல வழக்குரைஞர் தொழிலிலே அவர்களுக்கு

நல்ல செல்வாக்கும் புகழும் ஏற்பட்டுவிட்டது. இத்தொழிலிலே தொட்டது முதல் விட்டது வரை எழுத்தாளராக இருந்து உதவியவர் திரு. P. சுந்தரமையர் என்ற பாப்பு ஐயர் நேர்மையான குணம்படைத்த அவருக்கு நேர்மையான வழக்குரைஞருடைய எழுத்தாளர் என்ற முறையில் செல்வாக்கும் மதிப்பும் இருந்தது.

4.

அரசாங்கத்தில் பார்ப்பன வகுப்பாருக்கு இருந்த ஆதிக்கத்தை உடைப்பதற்காக 1917ல் தோன்றியது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) அதற்கு நீதிக்கட்சி (Justice Party) என்றும் பெயர். சர். தியாகராயர் டாக்டர் T. M. நாயர் என்ற இரு பெரியார்களும் இக்கட்சியைத் தோற்றுவித்தார்கள். சென்னை மாகாண ஆட்சியில்மட்டுமல்லாமல் இந்திய ஆட்சியிலேயே இருந்து வந்த பார்ப்பனஆதிக்கம் காவிரி வளநாடான தஞ்சையில்தான் ஆணிவேர் கொண்டிருந்தது. எனவே, அந்த ஆதிக்க ஒழிப்புக் கட்சிக்குத் தஞ்சையில்தான் பேராதரவு இருந்தது. நீதிக்கட்சியின் தூண்களாக இருந்தவர்களுள் பலர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மாவட்டத்தில் இக்கட்சிக்குத் தலைவர்கள் எனப்படுபவர்கள் மூவர். திரு. த. வே. உமாமகேசுவரனார், திரு. சர். A. T. பன்னீர்ச்செல்வம், திரு. ஐ. குமாரசாமிப் பிள்ளை ஆகியவர்கள் அம்மூவர். இவர்களை முப்பெருந்தலைவர்கள் என்றுஞ் சொல்லுவார்கள்.

1920-ஆம் ஆண்டில் சென்னை லோக்கல் போர்டு சட்டம் நடைமுறைக்கு வந்தது. தஞ்சாவூர் மாவட்டக்கழகம், தாலுக்கா போர்டுகளில் பல நீதிக்கட்சிச் சார்புடையவர்களது அதிகாரத்துக்கு வந்தது. தொடக்கத்தில் தஞ்சை மாவட்டக் கழகத் தலைமை திரு. V. K. இராமாநுச ஆச்சாரியாரிடம் இருந்த தென்றாலும் அப்பெரியார் தனது எல்லா அதிகாரங்களையும் துணைத் தலைவராக இருந்த திரு. A. T. பன்னீர்ச்செல்வத்திடம் ஒப்படைத்திருந்தார்கள். திரு. ஆச்சாரியார் ஓய்வு பெற்றபின் திரு. பன்னீர்ச்செல்வம் அவர்களே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தஞ்சை தாலுக்கா போர்டின் முதல் (Non - official) உத்தியோகத் தொடர்பில்லாத தலைவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் அவர்களே. பன்னீராண்டுகள் தொடர்ந்து தலைவராக அவர்களே இருந்துவந்தார்கள் என்பது பெருமைக்

குரியதாகும். அப்பொழுதிருந்த சட்டப்படி தாலுக்காபோர்டு தலைவர்கள் எல்லாம் சில்லாபோர்டின் உறுப்பினர்கள். அந்த முறையில் த. வே. உ. அவர்கள் தாலுக்கா போர்டின் பணியோடு சில்லாபோர்டின் பணியும் செய்துவந்தார்கள்.

5.

அவரது ஆட்சிக்காலத்தில் அவருடைய கால்படாத கிராமங்களே தஞ்சைத் தாலுக்காவில் இல்லை யென்னலாம். எந்த சிற்றூரும் பாட்டை இல்லாமல் இருக்கலாகாதென்பது அவர்களது கொள்கை. அவரது பன்னீராண்டாட்சியில் பெரும்பாலும் பாட்டைகளில்லாத ஊர் ஒன்றிரண்டு தவிர, இல்லையென்றே சொல்லலாம். அவ்வொன்றிரண்டுக்கும் பாட்டைகள் போடுவதற்கு வேண்டிய நிலங்களை ஆட்சியாளர் மூலமாக வாங்குவதற்கு (Acquisition Under Land Acquisition Act) ஏற்பாடு செய்திருந்தார்கள். தாலுக்கா போர்டுகள் 1934-ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு சில்லாபோர்டு பொறுப்புகளை ஏற்றபின் அப்பாட்டைகளும் போடப்பட்டு முடிந்தன. அவர்கள் காலத்தில் போடப்பட்ட பாட்டைகளில் முக்கியமானவை, வரகூர் - அம்பதுமேலகரம் பாட்டை ஒன்று. அது அக்கிரகாரத்தார் எதிர்ப்பில் போடப்பட்டது. ஆலங்குடி-கண்டியூர் பாட்டை — இது பெரியதொரு பாட்டையன்றி பல கிராமங்களை இணைப்பது. திருவையாறு ஏழூர்விழாத் தொடர்புடைய மேலத்திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய ஊர்களையும், திருப்பழனம் — திருச்சோற்றுத்துறை ஆகிய ஊர்களையும் இணைக்கும் பாட்டைகள் மிக முக்கியமானவைகளாகும். உயர்தரமான நன்செய், புன்செய் நிலங்களைப் பெருவிலை தந்து வாங்கிப்போடப்பட்டவை அவை. இந்த இரண்டு பாட்டைகளும் காவிரி குடமுருட்டி ஆகிய இரண்டு ஆறுகளுக்கும் இடைப்பட்டவை. வெள்ளக்காலங்களில் இவ் வாறுகளைக் கடப்பதற்கு ஒவ்வொரு பாட்டையின் இரு மருங்கிலும் பரிசுத் துறைகளை அமைத்தார்கள். அன்றித் திருப்பழனம் — திருச்சோற்றுத்துறைப் பாட்டையின் இரு மருங்கிலும்நிழலுக்காகத் தென்னைமரங்களைப் பயிரிடச்செய்தார். ஏழூர்விழாவில் வலம்வரும் அன்பர்கள் நன்செய் புன்செய் நிலங்களைக் கடந்துவந்த தொல்லைகள் நீங்கின.

பாட்டைகளைக் குறுக்கிடும் வாய்க்கால்களுக்குப் பாலங்கள் பல அமைத்தார்கள். தஞ்சாவூர் தாலுக்காவிலே இரண்டு தீவுக் கிராமங்கள் உண்டு. ஒன்று நாகத்தி இரண்டாவது தொண்டரையன்பாடி என்பவை. இவை ஆறுகளுக்கிடையில்

அமைந்தவை. இந்தக் கிராமங்களில் வாழும் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் எல்லோரும் கோடைக்காலங்களில் கூட நீந்தித்தான் வரவேண்டும். நாகத்திக்கு இவர்கள் காலத்திலேயே பாலங்கட்டி முடிந்தது. தொண்டரையன்பாடி கிராமத்துக்கு இவர்கள் காலத்தில் தொடங்கப்பட்ட பாலம் சில்லாபோர்டினால் கட்டிமுடிக்கப்பட்டது.

6.

தாலுக்காபோர்டு ஆட்சியை தமிழவேள், த. வே. உ. அவர்கள் ஏற்றகாலத்தில் தஞ்சை தாலுக்காவில் 40, 50 தொடக்கப்பள்ளிக் கூடங்களே இருந்தன. நீதிக்கட்சியார் சென்னை மாகாண ஆட்சியை மேற்கொள்ளுமுன் உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவைகளுக்கு அரசாங்கத்தால் நிறைய செலவு செய்யப்பட்டு வந்தது. தொடக்கக் கல்வி அதிக கவனம்பெறவில்லை. படித்த வகுப்பார் மேலும் மேலும் படித்துக்கொண்டு போனார்கள். படிக்காத வகுப்பார் பயிலும் பள்ளி வசதியின்றிப் படிக்காமலே இருந்தார்கள். அந்தக் காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 5 — 6 பேர்களே. நீதிக்கட்சி இந்த அவலநிலையைப் போக்கக்கருதி தொடக்கக் கல்விக்கு ஊக்கம் தந்தது. தொடக்கப் பள்ளிச் சட்டம் (The Madras Elementary Edn. Act 1920.) என்று தனிச்சட்டம் செய்தது. தொடக்கக் கல்விக்காகத் தனிவரி, தனி நிதியமைப்பு ஆகியவைகளுக்கு வகைசெய்தது. கட்டாயக் கல்விக்கும் அச்சட்டம் வகைசெய்தது.

இந்தச் சட்டத்தை முழு அளவுக்குப் பயன்படுத்தினார்கள் நமது த. வே. உ. அவர்கள். ஊர்தோறும் தொடக்கப்பள்ளிகள் எழுந்தன. 40, 50 பள்ளிகளே இருந்த தஞ்சைத் தாலுக்காவில் 170 பள்ளிகள் கல்விப் பணிசெய்தன த. வே. உ. அவர்களது முயற்சியின் பயனாக.

ஆசிரியர்களுக்கு ஊக்கம் கொடுத்தார்கள். நல்ல பணி செய்த ஆசிரியர்களைப் பாராட்டினார்கள். பணிசெய்யாது ஏமாற்றும் ஆசிரியர்கள் தாட்சணியமின்றித் தண்டிக்கப் பட்டார்கள் — வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள். கல்வித் துறைத் தணிக்கையாளர்கள் எழுதும் தணிக்கைக்குறிப்பு களின்மேல் நடவடிக்கை யெடுப்பதென்பது தஞ்சாவூர் தாலுக்காபோர்டு ஒன்றில்தான் என்று துணிந்துகூற என்னால் முடியும். தானே பள்ளிகளை முன்எச்சரிக்கை

யின்றிப் பார்வையிடுவார்கள். எச்சரிக்கையின்றிப் பள்ளிகளைப் பார்வையிடவென்றே தனித்தணிக்கையாளர் ஒருவரை நியமித்திருந்தார்கள்.

பெரிய கிராமங்களிலெல்லாம் இருந்த சிறிய பள்ளிக் கூடங்கள் வளர்ந்து 8ஆம் வகுப்புவரையுள்ள உயர்தொடக்கப் பள்ளிகளாயின. ஆறு முதல் எட்டுவரையுள்ள வகுப்புக் களுக்குப் பொதுத் தேர்வை (Common Examination) ஏற்படுத்தித் தாலுக்காபோர்டு பள்ளிகளெல்லாம் போட்டி போடச் செய்தார்கள். உயர் தொடக்கப் பள்ளிகளெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளோடு போட்டிபோடும்நிலை உண்டா கியது. தஞ்சை தாலுக்காவில் இவர்களது பன்னீராண்டு ஆட்சியில் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் தஞ்சை தாலுக்கா மக்களுக்கு எழுந்தது என்பது மிகையாகாது.

பல பள்ளிகளுக்குப் புதிதாகக் கட்டிடங்கள் கட்டினார்கள். சில பள்ளிகளுக்குக் கட்டிடங்களை விலைகொடுத்து வாங்கி வைத்தார்கள்.

உயர்நிலைப் பள்ளிகள் சில்லாபோர்டு பொறுப்பில் இருந்தன. அவற்றின் நடைமுறை பற்றிச் சில்லாபோர்டு தலைவர், சர். A. T. பன்னீர்ச்செல்வம் அவர்களுக்கு ஆலோசனை கூறிவந்தார்கள். தஞ்சை அரசர் அறநிலையங்களின் வருவாயிலிருந்து இரு உயர்நிலைப் பள்ளிகள் நடைபெற்று வந்தன; ஒன்று ஒறுத்தநாட்டிலும் மற்றொன்று இராசா மடத்திலும் ஆகும். அப்பள்ளிகளில் மாணவர்களுக்கு இலவச உணவும் உறையுளும் உண்டு. இந்த இரு பள்ளிகளிலும், சர். பன்னீர்ச்செல்வம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில், பார்ப்பன மாணவர்கள் தாம்உண்டி உறையுள் வசதிகளைப் பெற்றுவந்தனர். கடுமையான எதிர்ப்புக்களுக்கும் கண்டனங்களுக்கும் இடையே இந்த நிலையை மாற்றியமைத் தார்கள் தமிழவேள் த. வே. உ. அவர்களது துணைகொண்டு சர் A.T. பன்னீர்ச்செல்வம் அவர்கள். தமிழ்இன மாணவர்கள் இப்பள்ளிகளிலுள்ள உணவு உறையுள் வசதிகளைப் பெற்றுப் பெருமளவிற் பயனடையத் தொடங்கினர். பல்லாயிர ஏழைத் தமிழ் இளைஞர்கள் படித்து முன்னுக்குவர முடிந்தது இந்த இரு உயர்நிலைப் பள்ளிகளால்.

திருவையாற்றில் தஞ்சை அரசர் அறநிலையங்களின் செலவில் சமசுகிரதக் கல்லூரி நடைபெற்றுவந்தது. அக் கல்லூரியிலும் மாணவர்க்கு இலவச உணவு உறையுள்

உண்டு. அங்கும் பார்ப்பன மாணவர்கள் மட்டுமே பயனடைந் தனர். தமிழ் மண்ணில் தமிழ்மண் வளங்கொண்டு நடக்கும் கல்லூரியில் தமிழுக்கோ தமிழர்க்கோ இடமில்லை. தமிழவேள வர்களது ஆலோசனையின்பேரில் அக்கல்லூரி கீழ்த்திசை மொழிகளின் கல்லூரியாயிற்று (College of Oriental Studies). பேரெதிர்ப்புக்கள் முறியடிக்கப்பட்டன. தமிழ்ப் பிரிவு தொடங்கப்பட்டது. தமிழ் மாணவர்கள் நூற்றுக்கணக்கில் இடம்பெற்றனர். அக்கல்லூரி இதுகாறும் பல்லாயிரத் தமிழ்ப் புலவர்களை ஆக்கித்தந்துள்ளது. இன்னும் புலவர்களை ஆக்கித்தந்து வருகிறது.

தஞ்சாவூர் தாலுக்காபோர்டு ஆட்சியில் திருவையாற்றில் இராமச்சந்திரமேத்தா சத்திரம் என்று ஓர் அறநிலையம். அந்தச் சத்திரத்துக்கு நிலபுலங்கள் உண்டு. வடநாட்டிலிருந்து பைரா கிகளுக்குச் சோறு போடுவது அந்தச் சத்திரத்தில் நடந்து வந்ததாகக் கருதப்பட்டுவந்தது. ஆனால் அங்கு பைராகிகள் யாரும் வருவதில்லை. யார் யாரோ சாப்பிட்டார்கள். அந்த சத்திரத்தின் வருவாய் மிச்சப்பட்டு பெருந்தொகையை சேமிப்புச் செய்யப்பட்டது தமிழவேளவர்கள் ஆட்சியில். இந்தச் சேமிப்புக்கொண்டு வளமான நிலங்கள் வாங்கப் பட்டன. வருவாய் மேலும் மிகுந்தது.

இந்த நிலையில் திருவையாறு கீழ்த்திசை மொழிகளின் கல்லூரியில் தமிழ்ப் பகுதியில் ஏராளமான மாணவர்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து குவிந்தார்கள். இராமச்சந்திர மேத்தா சத்திரத்தின் வருவாயில் ஒரு பெரும் பகுதி தமிழ் மாணவர்க்கு உணவளிப்பதற்கு ஆக்கினார்கள் தமிழவேள் அவர்கள்.

சில்லாபோர்டின் ஆட்சியில் சர் A.T. பன்னீர்ச்செல்வம், தஞ்சை தாலுக்காபோர்டு ஆட்சியில் தமிழவேள் உமாமகேசு வரம் பிள்ளையவர்கள். இந்தக்காலமே தமிழ் இளைஞர்களுக்குப் பொற்காலம். அவர்கள் ஆட்சியின்கீழுள்ள எல்லாத் துறை களிலும் ஏராளமான தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றார்கள். தமிழ் நாட்டிலே தமிழர்களுக்கு வேலைவாய்ப்புப் பெருமளவில் ஏற்பட்டது என்றால் அது தஞ்சையில்தான் கால்கொண்டது என்று கூசாமல் கூறலாம். தமிழர்களாக உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தமிழவேள் அவர்களையும் சர். A. T. பன்னீர்ச்செல்வம் அவர்களையும் என்றென்றும் மறவார்.

தஞ்சையில் சிரேயசுசத்திரம் என்று ஒன்றுண்டு. சோம்பேறிகளுக்குப் புகலிடமாக இருந்த அந்தச் சத்திரம் ஆதிதிராவிட மாணவர்களின் விடுதியாக்கப்பட்டு தஞ்சையில் பல உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்கள் தங்கவும் இலவச உணவுபெறவும் வசதி செய்யப்பட்டது. இதுவும் தமிழவேளவர்கள் உறுதுணைகொண்டு சர். பன்னீர்ச் செல்வம் அவர்களால் சாதிக்கப்பட்டது.

தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளுக்கு ஒப்பமும் நிதி உதவியும் வழங்கும் சில்லாக் கல்விக் கழகத்து (Dt. Edl. Council) உறுப்பினராகவிருந்து பலகாலம் பணியாற்றி வந்தார்கள்.

தமிழவேளவர்கள் தாலுக்கா போர்டு சில்லா போர்டு சில்லாக் கல்விக் கழகம் ஆகிய நிறுவனங்கள் மூலமாகத் தமிழர் கல்விபெறப் பேருதவி புரிந்ததோடு தனிப்பட்டமுறையிலும் பல மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலப் பொருளுதவி செய்துவந்தார்கள். அன்றி அரசாங்கத்தில் தனக்கிருந்த செல்வாக்கைக்கொண்டு பல மாணவர்களை அரசாங்க உதவியோடு மேற்படிப்புக்கு மேலை நாடுகள் சென்றுவரவும் ஏற்பாடுசெய்தார்கள்.

தமிழவேளவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மூலமாகச் செய்த கல்வித்தொண்டினை பின்னர் விரித்துரைப்போம்.

7

தமிழவேள் அவர்கள் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள். அவர்களது வேண்டுகோட்கிணங்கி கரந்தை சேர்வைகாரன் தெருவில் என் தந்தையார், த. பா. சிவகுருநாத பிள்ளையவர்கள், திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு இரவுதோறும் செய்துவந்தார்கள். தம்புரா முதலிய இசைக் கருவிகளோடு சொற்பொழிவு நிகழும். ஒவ்வொரு இரவும் நகரின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் பெருந்திரளாகக் கூடுவார்கள். சொற்பொழிவு முடிவுற்றபின் ஆங்கிலத்தில் என் தந்தையாருக்குப் பாராட்டிதழ் வழங்கினார்கள்.

சமயப் பற்றுடையவர்களாக இருந்தார்களேயன்றி மடமைச் சடங்குகளில் பற்றில்லாதவர்களாகவே இருந்து வந்தார்கள். நான் மாணவனாக இருந்த காலத்திலேயே என் தந்தையார் எனக்குச் சமயதீக்கை செய்து வைத்திருந்தார்கள்.

காலை மாலை நேரங்களில் என் வீட்டுத் திண்ணையில் தருப்பை ஆசனத்திருந்து நான் அனுட்டானம் செய்வதுண்டு. எதிர் வீட்டுத் திண்ணையிலிருந்து என்னைப் பரிகாசம் செய்வார்கள் தமிழவேளவர்கள். காலஞ்செல்லச்செல்ல அவர்களே தீக்கை பெற்று அனுட்டானஞ் செய்வது, திருவாசகம் ஓதுவது உருத்திராக்கமணிவது ஆகியவைகளை மேற்கொண்டார்கள். நான் சமயப்பற்றையும் சமயச் சடங்குகளையும் துறந்த நிலையில் தமிழவேளவர்கள் சமயச் சடங்குகளை மேற்கொண்டமையை நான் பரிகாசம் செய்யவேண்டியதாயிற்று.

என் இளமை முதலே என் தந்தையாரோடு திருவை யாற்று ஏழூர் விழாவில் ஏழூரும் வலம் வந்தவன் நான். அதனை நான்விட்ட காலத்தில் அவர்கள் ஏழூர் விழாவில் ஏழூர் வலம் வருதலை மேற்கொண்டார்கள். வழுக்கையான தலை, பரந்த நெற்றி நிறையத் திருநீறு, அகன்ற தோள்களிலிருந்து மார்பில்புரளும் உருத்திராக்க (சிறுமணி) மாலை, இடையில் வெள்ளியஆடை அதன்மேல் கட்டப்பட்ட துண்டு இவற்றோடு நல்ல உயரமும் கம்பீரமான தோற்றமும் உடைய (எங்கள் வக்கீலையா) தமிழவேளவர்கள் ஏழூரும் கால்நடையாக வரும்போது யாரும் அவரைச் சிறிது தூரமாவது பின் தொடர்ந்து வராமல் இருக்கமாட்டார்கள். அப்படிப் பின் தொடர முடியாதவர்களது கண்கள் அவர்களைத் தொடர்ந்து வெகுதூரம் வந்தன.

இத் திருவிழாவை முன்னிட்டுச் சிறப்பான துப்புரவு வேலைகள் தாலுக்கா போர்டாரால் செய்யப்பட்டுவந்தன. துப்புரவு அலுவலர்கள் ஏனோதானோவென்றிருக்க முடிய வில்லை. முடியாது. ஏழூர் சுற்றும் அன்பர்களுக்கு எவ்வித துன்பமும் இல்லாத முறையிலே துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன. பகற்பொழுதில் கடக்கவேண்டிய இரண்டு ஆறுகளின் (காவிரி, குடமுருட்டி) மணற்பரப்பில் நடந்துசெல்வோர்க்கு கால் சுடாதபடி வைக்கோல் பரப்பப் படும்; மண், மணற் பாட்டைகளில் தண்ணீர் தெளிக்கப் படும். இரவு நேரத்தில் ஆங்காங்கே மண்ணெண்ணெய் ஆவி விளக்குகள் (Gas-lights) போடப்பட்டிருக்கும். இதுபோன்ற பலப் பல நல்லுதவிகளைத் தாலுக்காபோர்டின் மூலம் செய்து முன்னர் குறிப்பிட்டபடி பாட்டைகளில்லாதிருந்த இடங்களில் பாட்டைகள் அமைத்துத்தந்து ஏழூர்சுற்றுதல் துன்புடைய தாக இல்லாமல் உல்லாசச் சுற்றுலாவைப்போல் நிகழும்படி ஆக்கிவைத்தார்கள் தமிழவேளவர்கள்.

"பார்ப்பனரல்லாத இளைஞர் கழகம்" (Non-Brahmin Youth League) என்று தமிழ்நாடு முழுமையும் முக்கிய நகரங்களில் அமைப்புகள் இருந்தன. அரசியல் தொடர்பில்லாது சமுதாயப் பணி புரிவதற்கென திரு. சுரேந்திரநாத் ஆரியாவென்ற பெரியாரால் தொடங்கப்பட்ட கழகம் அது. தஞ்சைக் கழகத்துக்கு நான் கூட்டுச் செயலாளனாகவும், பொதுச் செயலாளனாகவும் இருந்து பணியாற்றி வந்தேன். கழகத்தின் பொதுக்கூட்டங்கள் அடிக்கடி கூட்டிச் சமுதாய சீர்திருத்தம் பற்றிச் சொற்பொழிவுகளும், சொற்போர்களும் நிகழ்த்துவோம் தமிழவேளவர்கள் தலைமையில் ஒருநாள் ஒரு சொற்போர்க்கூட்டம். தலைப்பு "மதம், கடவுள் மக்களுக்கு அவசியமா?" என்பது. அவசியமில்லை என்று காரசாரமாகப் பேசியவர்களில் நான் ஒருவன். தலைவர் முடிவுரையில் அவர்கள் கூறிய சொற்கள் இன்னும் என்காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "தளர்ச்சி ஏற்படுங்காலத்தில் ஊன்றுகோல் தேவைப்படுவதுபோல் தளர்ந்த காலத்தில் கடவுளும் மதமும் ஊன்றுகோலாக உள்ளன. இளைஞர்களுக்குத் தேவையில்லாதிருக்கலாம்; என் போன்ருருக்கு அவை தேவையே" என்று கூறி முடித்தார்கள்.

நானே (சிவ. ச.) அவரின்கீழ்ப் பணிபுரியும் தாளாளன். அவரது தலைமையிலேயே அவரது கருத்தை எதிர்த்துக் காரசாரமாகத் தாக்கிப்பேசினேன் என்பதற்காக என்னை வெறுத்தார்களா? அல்லது என் அலுவலில் ஏதாவது கோளாறு சொல்லித் தொல்லை கொடுத்தார்களா? இல்லை, பெருங்குணம் படைத்த பெரியாரல்லவோ தமிழவேள்! என்பால் அவர்களுடைய அன்பும் ஆதரவும் மிகுந்து காணப்பட்டன.

மற்றொரு நிகழ்ச்சியும் நான் கூருமல் விடுவதற்கில்லை. 1929-ல் முதலாவது சுயமரியாதை மாநாடு செங்கற்பட்டில் நடந்தது. பெரியார் இராமசாமி அவாகள் கண்ட சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு அது. அம் மாநாட்டுக்கு நீதிக் கட்சித் தலைவர்கள் பலரும் வந்திருந்தனர். தமிழவேள் அவர்களும் வந்திருந்தார்கள்; நானும் சென்றிருந்தேன். மாநாட்டுப்பந்தலில் அவர் முன்னும் நான் பின்னுமாக அமர்ந்திருந்தோம். "கடவுள் பெயரால் ஒரு காசுகூட செலவிடக் கூடாது" என்றொரு தீர்மானம் வந்தது. அதனை திரு. J. S. கண்ணப்பர் (திராவிடன் — ஜஸ்டிஸ் செய்தித்தாள்களின் ஆசிரியர்) தமிழவேள் முதலியவர்கள் எதிர்த்தார்கள்.

தீர்மானத்துக்கு வாக்கெடுக்கப்பட்டது; வெற்றியோடு நிறைவேறியது. ஆதரித்து வாக்களித்தது மட்டுமல்ல, தீர்மானம் நிறைவேறியதும் கை கொட்டி ஆர்ப்பரித்தவர்களுள் நானும் ஒருவன். எனது தலைவர் தீர்மானத்தை எதிர்ப்பது என்பது என் கருத்தையோ என் உணர்ச்சியையோ கட்டுப்படுத்த வில்லை. ஆனால் என் தலைவரால் எனக்கு, என் பிழைப்புக்கு எந்தவித கேடும் ஏற்படவில்லை; பிழைப்பில் உயர்வுதான் ஏற்பட்டது. தமிழ்ப்பெரியார் படைத்த பெருங் குணத்துக்கு இது மற்றுமொரு சான்றாகும்.

கடவுளைப்பற்றிய இந்தத் தீர்மானம் நிறைவேறிய பின் தமிழவேளவர்கள் சுயமரியாதை இயக்கத்தில் அதிகத் தொடர்பு கொள்ளவில்லை.

தமிழவேளவர்கள் சைவசமயச் சார்புடையவர்களாயினும் ஏனைய சமயங்களை வெறுக்கவோ எதிர்க்கவோ செய்யாததோடல்லாமல் அவ்வச் சமயங்களின் வளர்ச்சிக்கு உதவினார்கள். மேகளத்தூர், மைக்கேல்பட்டி, கிருத்தவப்பள்ளிகளின் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவினார்கள்.

மேலத்திருப்பூந்துருத்தியில் ஓர் தாலுக்கா போர்டு முகமதியப் பாடசாலை உண்டு. முகமதியப் பிள்ளைகளுக்குக் கொரான் பயிற்றுவிப்பதற்கென்று ஆசிரியர் ஒருவருண்டு. ஆனால் அவ்வாசிரியரின் ஊதியும் அவ் வூர் முகமதியப் பெரியார் ஒருவர் அதற்கென் வாங்கியிருந்த நிலவருவாயி லிருந்து அப்பெரியாரால் தாலுக்கா போர்டு மூலம் கொடுக்கப் பட்டு வந்தது. நில வருவாய் குறைந்தது. அந்த முகமதியப் பெரியாருக்கு நில வருவாய்க்கு அதிகமாகக் கொடுக்க முடியாத நிலை. நிலத்தையே தாலுக்கா போர்டார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என விண்ணப்பித்தார்.

விண்ணப்பத்தைத் தாலுக்கா போர்டு அலுவலகத்துக்குக் குறிப்பெழுதியனுப்பும் ஆணையோடு அனுப்பினார்கள் தலைவர் அவர்கள். குறிப்பெழுத வேண்டிய தாளாளர் நான்தான். எழுதினேன் நான். "இது சமயப் பயிற்சிபற்றியது; இத்தகைய பொறுப்பையும் நிதியையும் ஏற்றுக்கொள்ளுதல் 1920-ஆம் ஆண்டின் தலநிறுவனச் சட்டத்துக்கும், 1920-ஆம் ஆண்டின் தொடக்கப்பள்ளிச் சட்டத்துக்கும் விரோதமானது" என்று சட்டங்களை ஆதாரங்காட்டி, எழுதி வைத்தேன். மேலும் மேலும் பல கேள்விகளைக் கேட்டார்கள் எழுத்து மூலமாக. மேலும் மேலும் என் கருத்தையே வலியு

றுத்தி எழுதினேன். கடைசியாக நேரிற் கொண்டு வரும்படி ஆணையிட்டார்கள். நேரிற் கொண்டு போவதென்ருல் அவர்களிடம் அரைகுறையாகச் செல்ல முடியாது. எதைக் கேட்கப்போகிருர்களோ என்று பயந்தே கொண்டு போனேன். ஆனல் அங்கு அஞ்சவேண்டியது ஒன்றுமில்லை. சிரித்துக் கொண்டே "என்ன ஐயா நான் அந்த பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக வாக்குக் கொடுத்து விட்டேன்; நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று எழுதுகிறீர்களே" என்ருர்கள். நல்லவேளையாக இதற்கு பதில் கூறவேண்டிய அவசியம் எனக்கில்லாமல் செய்து விட்டார்கள் அருகில் இருந்த திரு. C. வேதாசலம் அவர்கள். "அவர் சட்டப்படி எழுதிவிட்டார். சட்டத்துக்கு மாருக நீங்கள் கொடுத்த வாக்குக்கு அவரைப் பொறுப்பேற்கச் சொல்லுகிறீர்களா?" என்று திரு. வேதாசலம் அவர்கள் கேட்டார்கள். "சரி; கடிதக்கட்டை வைத்துவிட்டுப் போங்கள்" என்ருர்கள்.

தலைவர் அவர்கள் அந்த அறநிலங்களையும் அதுபற்றிய பொறுப்புக்களையும் ஏற்கலாம் என்று குறிப்பெழுதினுர்கள். தாலுக்கா போர்டு ஒப்பமும் தந்தது. அதற்குப் பின் எனக்கேற்பட்ட அலுவல் மாறுதல் காரணமாக பின் நிகழ்ச்சிகளைக் கவனிக்க எனக்கு வாய்ப்பில்லாது போயிற்று.

தாலுக்கா போர்டுகள் கலைக்கப்பட்டு சில்லா போர்டின் ஆளுகைக்கு வந்த பின் கணக்கு ஆய்வாளர்களும் ஆட்சியாளர்களுமே மறுக்கலானுர்கள். அதுபற்றி நானே கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு அற ஆவணத்தை எடுத்துப் பார்க்கும்போது எனக்கு வியப்பாக இருந்தது. அந்த ஆவணத்தில் "கொரான் பயிற்சி" என்ற சொற்கள் இல்லை; "அரபி மொழிப் பயிற்சி" என்றிருந்தது.

8

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாளர், வணிகர், நடுத்தர மக்கள் ஆகியவர்களுக்குக் கடன் தந்து அநியாய வட்டி வாங்கும் லேவாதேவிக்காரர்கள் பிடியிலிருந்து அவர்களை விடுவித்து அவர்களுடைய கடன் சுமையைக் குறைப்பதோடு அவரவர்கள் தொழில் செய்யவும் உதவ வேண்டுமென்பது நீதிக்கட்சியாரது கொள்கைகளுள் ஒன்று. சில தொழில்களைக் கூட்டுறவுச் சங்கங்களே ஏற்று நடத்தவும் வேண்டும் என்பது அக்கட்சியாரது திட்டம். அவர்கள் ஆட்சிக்காலத்தே

ஆங்காங்கு கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றி மக்களுக்குதவி வந்தன. தமிழவேளவர்கள் கூட்டுறவு இயக்கத்திலே ஈடுபட்டுப் பல கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவித்தார்கள். கரந்தை திராவிடக் கூட்டுறவுச் சங்கம், தஞ்சை நில அடமான பாங்க் ஆகியவை அவர்களது பெரு முயற்சியால் தோன்றியவையாகும். அன்றியும் தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம் (Co-operative Press) அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் வெளியீடான "தமிழ்ப் பொழிலை" அச்சிடுவதையே முக்கிய அலுவலாகக் கொண்டிருந்த இந்த அச்சகம் பொதுமக்களுக்கும் நல்ல முறையில் பயன்பட்டு வந்தது. இந்த முயற்சியில் திருவாளர் ஐ. குமாரசாமிப் பிள்ளையவர்கள் உதவி பெருமளவினதாகும்.

9

தமிழவேள் அவர்களுடைய தமிழ்ப்பணி

முச்சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்ததாக அறிகிறோம். இச்சங்கங்கள் கலைந்து போகக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. இந்தச் சங்கங்களில் இடம் பெற்றிருந்த புலவர்கள் ஆக்கிய நூல்கள் பல மறைந்து போயின. சங்க நூல்கள் என்று இப்பொழுதுள்ளவை திரட்டப்பட்டுத் தொகுக்கப்பட்டவை எனத் தெரிகிறது. திருக்குறள் வேண்டுமானால் இதற்கு விதிவிலக்காக இருக்கக்கூடும்.

கடைச் சங்கம் கலைந்ததை அடுத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படும் சிலப்பதிகாரத்தில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. பாண்டியன் நெடுஞ்செழியன் 'மறை நா ஓசை அல்லது யாவதும்—மணி நா ஓசை கேட்டதும் இலனே' [கட்டுரைக் காதை வரி 31, 32] என்று கூறப்பட்டுள்ளது. பார்ப்பனர் ஓதும் மறை ஓசையன்றி ஆராய்ச்சி மணி ஓசையை அவன் கேட்டதில்லை என்று விளக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ந்த மதுரையிலே தமிழுக்குச் செல்வாக்கில்லை; தமிழ்வளர்த்த பாண்டியர் வடமொழிக்கடிமையாயினர் என்பது வெள்ளிடைமலை.

சிலப்பதிகாரத்தில் இன்னொரு கதையும் உண்டு. அது:- சேரநாட்டில் தமிழுக்கு ஆதரவு இருந்து வந்திருக்கிறது; சேரன் "வண்தமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்து" ஆதரித்து வந்தான்; இதைக் கேள்விப்பட்டான் சோழ நாட்டி

விருந்த 'பராசரன்' என்ற பார்ப்பனன்; புறப்பட்டான் சேர னிடம்; ஒரே கொள்கை, இரு பிறப்பு, முத்தீச் செல்வம், நான்மறைப் பயிற்சி, ஐவகை வேள்வி அறு தொழில் ஆகிய பார்ப்பனருடைய வாழ்க்கை முறைகளை சேரனிடம் விளக்கி, எதிர்த்த தமிழ்மறை வல்லாரை "நாவலங் கொண்டு நண் ணர் ஓட்டி — பார்ப்பன வாகை சூடி" சேரனிடம் பெரும் பொருள் பெற்றுத் திரும்பினன்; என்பது. இது மதுராபதி என்ற தெய்வத்தால் கண்ணகிக்குச் சொல்லப்பட்ட கதை களில் ஒன்று. இதிலிருந்து சேரநாட்டில் தமிழுக்கு இருந்த செல்வாக்கும் தொலைந்தது என்பது வெளிப்படை.

சோழநாடு வடமொழியாளர்களது கோட்டையாகவே அமைந்து விட்டதென்பதற்குச் சிலப்பதிகாரம் பல சான்று கள் தருகிறது.

இவைகளைக் கொண்டு தமிழ் வளர்த்த சங்கங்கள் எப்படி மறைந்தன என்பதை ஊகிக்கலாம். கடைச் சங்கம் மறைந் ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஒரே குழப்பம் சோழ சேர பாண்டியர் என்னும் முப்பெரும் வேந்தர்கள் ஒருவர்மேலொ ருவர் ஏவி விடப்பட்டு 'வீரம்' என்ற பெயரால் ஒருவரை யொருவர் மாய்த்துக் கொண்டனர். வடநாட்டார் தென்னுட் டிற் படையெடுப்பதும், தென்னுட்டு மன்னர்கள் வடநாட்டிற் படையெடுப்பதும் "வீரத்தின்" பெயரால் கங்கையைக் கொள்வதும் இமயத்தில் புலி வில் கயல் பொறிப்பதும் இம யத்தின் கல் கொள்வதும் பொதுவான நிகழ்ச்சிகளாக இருந் துள்ளன. இந்நிகழ்ச்சிகட்கு மூலமாக இருந்தவர் தங்களை யும், தங்கள் மொழியையும், தங்கள் சமயத்தையும் நிலைநாட் டிக்கொண்டனர் என்று கருதலாம். அரசர்கள் "மறை நாவோசை யல்லது யாவதும் — மணி நாவோசை கேட்டது மிலரே" என்ற நிலை ஏற்பட்டது. தமிழ் யாரோ ஒரு சிலரிடம் ஓடி ஒளிந்து கொண்டது.

அடுத்துத் தமிழ்நாட்டில் வரலாறே இல்லாத இருண்ட காலத்தில் மறைநாவோசை யல்லாத வேறெதையும் கேளாத தமிழ் மன்னர்களைக் காணேம். களப்பிரர், பல்லவர், நாயக்கர், மராட்டியர், மகமதியர் இவர்தம் ஆட்சி. இடையிலே பிற மொழிக் கலப்பால் சேரநாட்டுத் தமிழ்மொழி மலையாள மொழி யாகவும், முன்பே சோழநாட்டு வடபகுதித் தமிழ்மொழி கன்னடம், துளுவம், தெலுங்கு ஆகிய மொழிகளாகவும் மாறியது. மாறுதல் அடையாமல் தமிழ் பேசப்பட்ட பகுதி

மிகக் குறுகி விட்டது. மராட்டியர், மகமதியர், நாயக்கர்கள் ஆட்சிக்காலத்திலும் தமிழுக்கு ஆதரவில்லை. அடுத்து வந்த ஆங்கிலேயரும் தமிழை ஆதரிக்கவில்லை. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வந்த கிருத்தவப் பாதிரியார்கள் ஒளிந்து வாழ்ந்த தமிழை வெளிக் கொணர்ந்தார்கள். அந்தப் பாதிரிமார்களுள் கால்டுவெல் என்ற பாதிரியார் மிக மிகச் சிறந்தவர். இந்திய மொழிகளையெல்லாம் பயின்று ஆய்ந்து மொழிகளை இனவாரியாகப் பிரித்துத் திராவிட மொழிகள் என்ற பிரிவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகிய மொழிகள் அடங்கியிருத்தலையும், இந்த மொழிகள் எல்லாம் தமிழில் இருந்து பிரிந்தவை என்ற உண்மையையும் எடுத்துக் காட்டினார். இவர் தம் ஆய்வுரை தமிழர்க்கு விழிப்புணர்ச்சியைத் தந்து தமிழின் தொன்மை அருமை பெருமைகளை யெல்லாம் உணரச் செய்தது. முக்கியமாக ஆங்கிலம் பயின்ற தமிழர்களுடைய கண்கள் திறந்தன. அவர்கள் கண்முன் தமிழர்களது உயர்ந்த நாகரிகம், பண்பாடு முதலியவற்றை சித்தரித்து காட்டும் உயர்ந்த நூல்களைத் தாங்கி ஆட்சி செலுத்திய மனிதன் தோன்றிய காலத்தில் தோன்றிப் பல்லாயிரமாண்டுகளாகத் திருந்தி செம்மையோடு வளர்ந்து சிறப்புடன் நிற்கும் தமிழ்த் தாயின் புகழ் உருவம் நின்றது. மறுபக்கம் ஐந்துகூறுகச் சிதைந்து சிதறி ஒளியிழந்து கிடந்த தமிழ்த் தாயின் உருவமும் அவர்கட்குக் காட்சியளித்தது, துடித்துப் போயினர். தமிழன்னையின் சிதைந்த நிலையைச் சீர்செய்து அரியணையேற்ற பலர் பலவாறு முயன்றனர். அவர்களுள் திரு. த. வே. உமாமகேசனாரது இளவல் ஒருவர். 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரால் ஒரு சங்கத்தை 1911-ல் நிறுவினார்கள். ஆனால் அவர் நிறுவிய சங்கம் நன்கு கால்கொள்ளுமுன் மறைந்தார்கள். இளவல் தொடங்கிய பணியைத் திரு. த. வே. உ. அவர்கள் மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடெங்கணும் குடத்துள் விளக்குப்போல் கிடந்த புலவர்களை யெல்லாம் தேடி, சங்கத்துக்கு அழைத்தார்கள்; சொற்பொழிவுகள் செய்வித்தார்கள்; தமிழ்ப்பெரும் புலவர்கள் கூடுவதற்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெரு மன்றமாயிற்று. தமிழைத் தமிழர்களே கல்லாமற் புறக்கணித்த காலத்தில், தமிழிற் பேசுவதே குறைவு என்ற கருத்து வேரூன்றத் தலைப்பட்ட காலத்தில் அழகிய பொருள் பொதிந்த தமிழ்ச் சொற்களைப் போக்கி வடசொற்கள் அவற்றின் இடங்களைக் கைப்பற்றித் தமிழைச் சிதைந்து வந்த

காலத்தில் இக்கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்மக்கள் மாட்டு ஒரு புரட்சியை உண்டாக்கியது. தமிழிற் சொற்பொழிவாற்றிப் பழக்கமில்லாதவர்கள் வருந்திக் கூடியுள்ள மக்களின் மன்னிப்பைக் கோரியாக வேண்டிய நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டது. வடமொழிச் சொற்களைக் கலந்து பேசுவது குறைவானதாகவும், குற்றமானதாகவும் கருதப்படலாயிற்று. தனித்தமிழ் நடை சிறப்பிக்கப்படலாயிற்று. தனித் தமிழ் நடைக்குக் "கரந்தை நடை" யென்றே பெயராயிற்று. 'விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை'கள் மறைந்து 'திருமண அழைப்பு' 'திருமணத் திருமுகம்' முதலியவைகள் தோன்றலாயின. "மகாராயராயஸ்ரீ" போய் "திருவாளர்" "திரு" முதலிய தமிழ்ச் சொற்கள் வந்தன. "பிரசங்கம்", "அக்கிராசனதிபதி" "காரியதரிசி" "பொக்கிஷதார்" ஆகியவை "சொற்பொழிவு" "தலைவர்," "அமைச்சர்" "பொருளாளர்" ஆகிய தமிழ்ச் சொற்களுக்கு இடந்தந்து ஓடி விட்டன. இன்னும் இது போன்ற எத்துணையோ தமிழ்ச் சொற்கள் வழக்குக்கு வந்து வடசொற்களை ஓட்டின. ஒரு சில புலவர்களே அறிந்திருந்த சங்கஇலக்கியங்களைத் தமிழ்மக்கள் அறியவும் பயிலவும் செய்தது. பன்மொழிப்புலவர்களான திருவாளர்கள் மாணிக்க நாயக்கர், சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் முதலியவர்கள் தமிழ் இலக்கியங்களைப் பயிலும் முறையில் மாறுதலை உண்டுபண்ணினர்கள். இலக்கியங்களுக்கு உரையாசிரியர்கள் எழுதி வைத்துள்ள உரைகளை அப்படியே உட்கொண்டு வெளியிடும் முறைக்கு விடை கொடுத்தார்கள். மூலங்களுக்குச் சரியானதுதானு உரை என்பதைச் சிந்தித்து ஏற்கவோ தள்ளவோ செய்யலாம் என்ற உரிமையை எடுத்துக் காட்டினர்கள் தமிழர்களுக்கு. உரைகளை பயபக்தியோடு ஏற்றுக் கொள்ளும் முறை ஒழிந்து ஆராய்ச்சி முறை தமிழகத்தே எழுந்தது. கரந்தைத் தமிழ்ப் பெரு மன்றம் இத்தகைய புரட்சிக்கு நல்லாதரவு தந்து வளர்த்தது.

தமிழவேளவர்கள் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழுக்கும் தமிழர்க்கும் ஆற்றிய அரும்பணிகளை தொகுத்துக் கூற எனக்குப் போதிய ஆற்றல் இல்லை. அவர்களோடு

தோளோடுதோள் நின்று உழைத்தவர்கள் பலருண்டு. அவர்கள் அப்பணியினைச் செய்வார்களென்று நம்புகிறேன்.

மாணவர்கள் நல்ல முறையில் தமிழ் பயிலவேண்டு மென்ற கருத்தோடு தொடக்கப்பள்ளி யொன்றைத் தொடங்கினர்கள். பள்ளி வளர்ந்தது. தமிழ்ப்பற்றும் தொண்டுணர்வும் கொண்ட ஆசிரியர்கள் பணியேற்று மாணவர்களைப் பயிற்றுவித்தனர். இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி பொதுவாக உயர்நிலைப்பள்ளி என்ற இப்பள்ளி 8-ஆம் வகுப்பில் பயின்ற மாணவர்கள் பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.) மாணவர்களின் தரம் பெற்றனரன்றிச் சிறப்பாகத் தமிழில் இன்னும் அதிகமான தேர்ச்சியும் பெற்றனர். இந்தப் பள்ளியில் 8.ஆம் வகுப்புத் தேறிய மாணவர்களுக்கு இந்நகரிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளெல்லாம் தங்கள் IV-ஆம் படிவத்திலே சேர்வதற்கு அழைப்பு விடுத்துச் சேர்த்துக் கொண்டன; தமிழவேளவர்கள் தேர்வு வினுத்தாள்களை ஆங்கிலம் தமிழ் ஆகிய பாடங்களுக்குத் தாமே தயாரித்து விடைத்தாள்களைத் தாமே திருத்துவார்கள். ஆசிரியர்களின் திறனைத் தெரிந்து கொள்வதற்கு அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். இவை யெல்லாமன்றி மாணவர்க்கு சொற்பொழிவாற்ற நல்ல பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தகுந்தது.

இந்தத் தொடக்கப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாயிற்று. சங்கத்தின் வெள்ளி விழாவின் போது புலவர் கல்லூரி தொடங்கப்பட்டது.

புலவர் கல்லூரி தொடங்கப்படுமுன்பே கரந்தைத்தமிழ்ச் சங்கப்புலவர்களது உதவியால் தனிமையிற் பயின்று “வித்துவான் தேர்வு” எழுதிப் பட்டம் பெற்ருேர் பல்லோராவர். கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரி ஆண்டு தொறும் பலப்பல புலவர்களை ஆக்கித் தமிழ் நாட்டுக்கு வழங்கி வருகிறது.

தமிழவேளவர்கள் க. த. சங்கத்திலே நூல் நிலையமொன்றை அமைத்துப் புதிதாக அச்சிலில்லாத பல பழைய நூல்களையும் புதிய புத்தகங்களையும் ஏட்டுச் சுவடிகளையும் சேர்த்தார்கள். அது இன்று பல்லாயிரம் புத்தகங்களைக் கொண்ட புத்தகக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

பெற்ருேரும் புரப்போருமின்றிக் கற்க வாய்ப்பில்லா எளிய குழந்தைகள், உண்டு உறைந்து படிப்பதற்கென்று திக்கற்ற மாணவர் இல்லம் ஒன்றை நிறுவினுர்கள். அது எளியார்க்குப் பேருதவியாக இருந்து தொண்டு செய்து வருகிறது.

தமிழவேள் அவர்களும் அவர்களது தோழர்களான சர். A. T. பன்னீர்ச் செல்வம், திரு. ஐ. குமாரசாமியவர்கள் போன்ற பலரும் அரசியலிலும் பிற துறைகளிலும் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். சங்கம் பல துறைகளை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இவைகளெல்லாம் நிலையாக நின்று இயங்கி வருவதற்குப் பெரும் பொருளைத் திரட்டுவதற்கு நல்ல வாய்ப்பிருந்தது. ஆனல் அவர்கள் அது செய்ய ஒருப்படவில்லை. சங்கப் பணிகள் நிறைவேறு வதற்குத் தமிழர்களது உணர்ச்சியும், ஊக்கமும், உழைப்புந் தான் நிதியே தவிர பொருள் நிதியாகாது. பெரும் பொருள் உள்ள இடத்தில் போட்டியும் பூசலுந்தான் விளையும்; அதுவே சங்கத்துக்கு அழிவைத் தேடி விடும் என்று அவர் கள் கூறிய சொற்கள் என் காதில் இன்றும் ஒலித்துக் கொண்டுள்ளன.

அவர் கண்ட சங்கக் கல்வி நிலையங்களை உயர்ந்த முறை யில் திருத்தியமைக்க எண்ணி, கல்கத்தாவிலுள்ள சாந்தி நிகேதம் முதலிய கல்வி நிலையங்களை நேரிற் கண்டு வர வடநாடு சென்ருர்கள். சாந்திநிகேதத்தைப் பார்த்தார்கள். காசிப் பல்கலைக் கழகம் முதலிய நிலையங்களைக் காணப் புறப் பட்டார்கள். காசி சேருமுன்பே காலன் குறுக்கிட்டு விட் டான். தமிழகம் தந்தையை இழந்த தனையனைப் போலக் கலங்கி நின்றது, என்ருலும் தமிழர்கள் அயர்ந்து விடவில்லை. தமிழவேள் காட்டிய வழியிலே நின்று கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொண்டு புரிந்து வருகிறது. தமிழ் வாழ்க! க. த. ச. வாழ்க! தமிழவேள் புகழ் வாழ்க!

அறிவுருவொன் றடைந்ததென அருங்கலைதங் கரைகண்டாய்!
ஆற்றல் தானே
செறியுருவம் கொண்டதெனச் செய்தொழில்க டமிற்சிறந்தாய்!
செவ்வி தாய
அறவடிவம் ஈதென்ன அருந்தமிழின் பெருந்தொண்டும்,
அன்ன சீர்த்தாம்
மறுவில்தமிழ் நாடுதமிழ் மக்களது தனித்தொண்டும்
வாய்ந்தாய் அம்மா!

த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் 80 ஆம் யாண்டு பிறந்த நாள் விழா.

தலைவர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் முன்னுரை:-

இவ்விழாவில் பங்குகொள்ளும்பேறு 30 மைல்களுக் கப்பாலுள்ள எனக்குக் கிடைத்தது பற்றி மகிழ்ச்சிகொள் கிறேன். வாழ்ந்தபோது பாராட்டாத தமிழகம், இறந்தபோது கொண்டாடுகின்ற தவற்றைத் தொடர்ந்து செய்து வருகின் றது. "தமிழ்" என்ற சொல் தமிழர்களுக்கு வெறுப்பை யளித்த காலத்தில் அவர் தொண்டு செய்தார். 'தங்குபுகழ் செந்தமிழ்க்கோர் அன்பராகில் அவர்கண்டீர் யாம்வணங்கும்' "மனிதனுரே" என்று கருதப்படாமல் "கடவுளாரே" என்று கருதப்பட்ட காலம். தமிழாசிரியர்கூட 'கோட்டு போடுகிருர்' 'சைக்கிள் விடுகிருர்' என்று கருதப்பட்ட காலம். தமிழன் தமிழரைப் பார்த்துத் "தமிழைப் படியுங்கள்" என்று சொல் லப்பட்ட காலம். இது, அமெரிக்காவிலோ, ஜப்பானிலோ, சீனுவிலோ இல்லாத கொடுமை. ஆங்கிலக்கடல் நீந்தித் தமிழ்க்கடல் ஏறிய பெரியார்களுள் தலைசிறந்தவர் சா. சோம சுந்தர பாரதியும், தமிழவேளும் ஆவர். ஒன்றே செய்தார். நன்றே செய்தார். அதுவும் அன்றே செய்தார். ஆழமாக உழுதல் நல்லது என்பதைப் போல் பணியாற்றினர்.

அவர் என்னுடைய ஆசிரியர். பல படிப்பினைகளை நான் அவரிடத்தில் பெற்றுக்கொண்டேன். சங்க ஆண்டு விழாவுக்கு வருவோரனைவருக்கும் சோறு வழங்கல் அவர் மனைவியார் கடன். தமிழ்த்தொண்டு வழங்கல் இவர் கடன். 1921-ஆம் யாண்டு என எண்ணுகின்றேன், பித்தளைத் தாம்பாளத்தில் சோறு போடுகிற வழக்கத்தை அவர் வீட்டில் தான் யான் முதலில் கண்டேன். இதை யான் அவரிடம் கற்றேன். மற்ருென்று பண்பாடு.

நீதிக்கட்சி காரியமாக நாங்கள் சந்திப்பது வழக்கம். இல்லாதபொழுது ஒருவரைப்பற்றிப் பேசக்கூடாது. புறங் கூறல் தவறு என்பதை இவரிடத்தில் கண்டேன். இதனுல் இவர் என் ஆசிரியர்.

நாடு, மக்கள், மொழி, அரசு ஆகியவற்றிற்கு வழி காட்டக்கூடிய பெருமக்கள் தமிழ்ப் புலவர்களே என்ற முடிவு தமிழவேளினுடையது. தஞ்சை என்று சொன்னவுடன்

29—7—62ல் நிகழ்ந்த இவ்விழாவின் சொற்பொழிவுகளின் சுருக்கம்.

அரசியல் உலகில் ஐ. குமரசாமி பிள்ளையும், A. T. பன்னீர்ச் செல்வமும் நினைவுக்கு வருவர். தமிழ் என்றவுடன் நாட்டா ரய்யாரவும் கவியரசும் நினைவுக்கு வருவர். இந்நான்கு பேரை யும் நினைக்க தமிழவேளின் நிழல் தொடர்ந்தே வரும்.

சங்க உறுப்பினரின்பால் அளவற்ற அன்புடையவர் தமிழவேள். ஒருகால் ஓர் உறுப்பினரின் மூன்றுமாதக் குழந்தை இயற்கை யெய்தியது அறிந்து திருச்சிக்கு ஓடோடி வந்தார். படிப்பை விட - பட்டத்தை விட - சங்கத்தை விட, ஒழுக்கத்தைச் சிறப்பாக மேற்கொண்டார். தமிழுக்கோ தமிழருக்கோ பாதுகாப்பில்லாத சமயத்தில் தோற்றுவிக்கப் பட்டது இவ்வமைப்பு. இவரது உடல் தமிழ் மண்ணிலே புதைக்கப் பெறுமல் வடநாட்டு மண்ணிலே புதைக்கப்பட்ட உண்மை வேறு.

மறைமலையடிகளை அவரது பிள்ளைகள் எரியூட்ட விரும் பினர்கள். அன்பர்கள் புதைக்க விரும்பினர்கள். ஆனல், அவர் "ஏன், இந்த மண்ணில் பிறந்தேன்?" என பன்முறை என்னிடம் சொல்லியதுண்டு. அதுபோல், இவரது உடல் வடநாட்டு மண்ணில் புதைக்கப்பட்டது.

நல்லறிஞன், நல்ல தமிழன், நல்ல குடியில் தோன் றிய பேரறிஞன். நாடு உள்ளவரை, மொழியுள்ளவரை தமிழர்களனைவரும் கொண்டாட வேண்டும். கொண்டாடா விட்டால் பழி. கொண்டாடுவதனல் உளமகிழ்ச்சி. தமிழ்ச் சங்கத்தினுடைய கொள்கை "சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக" என்பதே அதைச் செல்லுமிடமெல்லாம் செய்ப வர் ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள் என்ருர்கள்.

ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள் :—

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதுபற்றிப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுதல் எங்களுடைய பழக்கமாகும். பேசுகின்றபொழுது உள்ளக் கிளர்ச்சியோடு பேசுவோம். ஆனல், இன்று பேசு வது வேறு. என்னை 46 ஆண்டுகளுக்குப் பின்னே அழைத் துச் செல்லுகின்றது.

22-ஆம் வயதின்போது Intermediate படித்துவிட்டு இங்கு வந்தேன். அவர் தமிழில் பேசிய பேச்சுக்கள் எங்கள் உள்ளங்களைக் கவர்ந்தன. எங்களைத் தமிழில் பழக ஊக்கு வித்தவர் அவரே. தொல்காப்பியம், தெய்வச்சிலையார் உரை யை ஏட்டில் எழுதும் வேலையை எனக்குத் தந்தார். நான்,

கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை, உலகவூழியர் ஆகிய மூவரும் எழுதிய உரையை ஆராய்ந்து கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் 'Juries to Students' என்ற ஆங்கிலப் புத்தகத்தைக் கொடுத்து "இதைப் படித்துவிட்டுப் பிறகு அதைப் படியுங்கள்" என்று சொன்னார். திரிபின்மை நீக்கிய விசேடம், இயைபின்மை நீக்கிய விசேடம் என்ற விடங்களிலும் எங்கள் ஐயத்தைப் போக்கினார். இதுபோல் பல சமயங்களில் எங்கட்கு ஆசிரியராகவும், சிக்கல்களில் நடுவராகவும் இருந்தார். 1924-ஆம் ஆண்டிலேயே இதைச் செய்தார். ஆங்கில முறையைத் தமிழில் புகுத்தச் செய்தார். அவரிடத்து, மீளா அடிமையாகக் கூடிய மனப்பான்மை எங்கட்குத் தோன்றியது. அவரை நாங்கள் 'வக்கீலய்யா' என்றுதான் அழைப்போம். தாலுக்கா போர்டில் நல்ல தமிழ்ப் பெயர்களைக் கையாண்டார். ஆண்டறிக்கையைத் தூய தமிழில் எழுதமுடியும் என்று எடுத்துக் காட்டினார். அவர் பேச்சில் வேற்று மொழி கலக்கவே கலக்காது. சிலப்பதிகாரத்தைப்பற்றி ஐந்துவாரம் K. S. இராமசாமி சாஸ்திரிகள் தலைமையில் தமிழவேள் சொற்பொழிவாற்றினார். ஒரு சமயம் ஆளுநர். டாக்டர். சுப்பராயன் வருவதாக இருந்தது. அவர் காலந்தாழ்த்தி வந்த சமயம், வரவேற்புரையில் இனிய எளிய தமிழில் காலந்தாழ்த்தும் குற்றத்தைப்பற்றிக் கண்டித்துரைத்து, அவரது உள்ளத்தைச் சல்லடைக் கண்கள்போல் துளைத்து வருத்தினார். எவரையும் கண்ணோட்டமின்றிக் கண்ணறப் பேசுவதில் தமிழவேள் தலைசிறந்தவர்.

இந்தி எதிர்ப்பு சமயத்தில், நான் வடஆர்க்காடு மாவட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அம்மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தமிழவேளும், முத்தமிழ்க் காவலரும் வந்திருந்தார்கள். அப்பொழுது ஊரெங்கும் விழாக் கோலம் பூணுமாறு அழகுபடுத்தியிருந்தனர். வீதியில் உலா வருகின்றபொழுது உலகநாத முதலியாரும், அவரது மனைவியும் தமிழவேளின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். 'என்னை, ஏன் வணங்குகின்றீர்கள்?" என்று தமிழவேள் கேட்டதற்கு, " உங்களுக்காக வணங்கவில்லை. உங்கள் தமிழ்த் தொண்டுக்காக வணங்குகின்றோம்" என்றனர். பாராட்டுதல்கள் கண்டபோது அஞ்சி நடுங்குகின்ற ஒரே தலைவர் தமிழவேள்தான். காசு கொடுத்து ஆட்களை வரவழைத்து வாழ்த்துப் பெறுகின்ற தலைவர்களையும் கண்டிருக்கிறேன்.

"என்னிடத்தில் அவருக்கு ஆழ்ந்த அன்பு உண்டோ" என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றிற்று. வெள்ளிவிழாச் சமயம், நான் உரியகாலத்தில் வரவியலாது போயிற்று. வெள்ளி விழாவில் பங்குபெறும் சொற்பொழிவாளர்களின் பேச்சுக்களைக் குறிப்பெடுத்துப் 'பொழிலில்' வெளியிடும் பணியை எனக்கு இட்டிருந்தார்கள். நான் வந்து விழாக் கோலத்தைக்கண்டு எழுதவேண்டும் என்ற எண்ணத்துடன், "அவர் வரும்வரை விழாக்கோலத்தைக் கலைக்கவேண்டாம்" என்று வெள்ளைவாரணம் அவர்களிடமும், சிவ. குப்புசாமி பிள்ளையவர்களிடமும் சொல்லியிருந்தார். நான் மாவட்டக் கழக உயர் நிலைப்பள்ளியில் படும் துன்பநிலையை அறிந்து கண்ணீர் விட்டார்.

A. T. பன்னீர்ச்செல்வம் அவர்களை மேல்நாட்டுப் பயணத்தின்போது வழியனுப்புவான் வேண்டி தமிழவேள் அவர்கள் சென்னைக்கு வந்தார்கள். அப்போது என்னையும் வருமாறு எழுதியிருந்தார். செய்யாற்றில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டைத் திறந்து வைக்க A. T. பன்னீர்ச் செல்வம் வந்திருந்தார். நான் அம் மாநாட்டில் ஒருமருங்கில் நின்றேன். என்னைக் கண்டவுடனே ஓர்ஆளை அனுப்பி என்னை மேடைக்கு வருமாறு அழைத்திருந்தார். "கவனித்துக் கொள்ளுங்கள். நம் பையன்" என்று அங்குவந்த மாவட்டக் கழகத்தலைவரிடம் என்னை அறிமுகப்படுத்தி-பரிந்துரையும் செய்தார்.

தமிழவேள் இயற்கையெய்திய செய்திகேட்டு, "நல்ல தமிழ்மகன்—தனிமகன் ஒருவனைத் தமிழகம் இழந்தது. தன்னுடலை வடநாட்டிற்குத் தந்தார். இதனால், ஏதோ நடக்கப் போகின்றது" என்று திரு. வி. க. சொன்னார். அது மெய்ம்மையாகி, இப்பொழுது வடநாட்டுப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் தமிழ் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருதல் கண்கூடு. யானும், திரு. வி. க. வும் திருத்தணிக்கைக்குப் போய்க்கொண்டிருந்தபோது தமிழவேள் இறந்தசெய்திகேட்டு அலமந்தோம்.

இன்று தமிழவேள் இருந்தால் அரசவையில் எத்தனை வகையான கிளர்ச்சிகள் நடந்திருக்கும் என எண்ணிப்பார்க்க வேண்டும். இன்று கல்லூரிகளில், சிலப்பதிகாரத்தில் வடநாட்டான் கல்கொணரும் பகுதி பாடமாக இல்லை. இன்று குறள் வேண்டுவதில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த மக்கட்குச் சொன்னார். ஆதலின், அது தேவையில்லை,

என்கின்றனர் சிலர். இதனுல் அறிவியல் வளருமா? எனக் கேட்கின்றனர். நான்கு நூற்ருண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய சேக்ஸ்பியரையும், மில்டனையும் படித்தால் மட்டும் வளர்ந்து விடுமா? பிறகு ஏன் இவ்வாய் தமிழுக்குமட்டும் இவ்வாறு சொல்ல வேண்டும்? இன்று, எதற்கும் அஞ்சாத நெஞ்சம்–அறம் பிறழாத உள்ளம்–நீதிவழுவாத செயல்மிக்க தலைவர்கள் தேவை. இன்றைய தலைமை வறுமையையும் அறியாமையையும் வைத்துப் பயன்படுத்தி வாழ்கிறது. தமிழ்படிப்பவர்கள் பழங்காலப் புலவர்களைப்போல் பல துறைகளில் ஈடுபட வேண்டும்எனச் சொல்லுவார்.

ஒருசமயம் பயிற்சிபெருத ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்த போது கல்வி அலுவலர் கேட்ட கேள்விக்கு, பயிற்சி பெருத சிலரையும் பெற்ற சிலரையும் அழைத்துக் கல்வி அலுவலர் முன்னிலையில் கீழ்க்கண்ட நேர்முகத் தேர்வு நடத்தினுர்.

1. ஓர் ஊரில் நீங்கள் பள்ளிக்கூடம் தொடங்குவதாயிருந்தால் என்ன செய்வீர்கள்?
2. பெற்ருேர்கள் பிள்ளைகளை அனுப்ப மறுத்தால் என்ன சமாதானம் சொல்வீர்கள்?
3. நீங்கள் ஓர்ஊரில் பள்ளி தொடங்கிய செய்தியை உங்கள் மேலதிகாரிகளுக்கு எவ்வாறு எழுதுவீர்கள்?

என்று கேட்டார். அரசு தவறுகின்றபொழுது தவற்றைக் கண்டித்து நல்லவழியைப் பின்பற்றச் செய்தபெருமை தமிழவேளுக்குரியது.

“ எங்குபோய்ப் பணிசெய்தாலும் சமயத்துறையில் பின்வாங்காதீர்கள். சமயந்தான் மக்களை ஒன்றுகூட்டுவது ” என்று அழுத்தமாகச் சொல்வார். இவ்வாறு செய்தால் உங்கள் நாடு உயரும். மொழி உயரும். நீங்களும் உயரலாம். தன்னைச் சேர்ந்தாரை — தன்னை அடைந்தாரை — அன்பு கொண்டாரை நன்னெறியில் நிறுத்திய ஒரு பெருந்தலைவர் தமிழவேள் அவர்களாவர் என்று கூறினுர்கள்.

திரு. வெள்ளைவாரணனுர் ஆற்றிய உரை :—

தமிழவேள் அவர்களை 1932–ஆம் யாண்டு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சொற்பொழிவாற்றச் சென்றபோது காணும் பேறு பெற்றேன். அப்பொழுது தமிழிசை இயக்கம் தோன்ருத காலம். இசைக் கல்லூரி அண்ணுமலையில்

இருந்தது. "தேவாரமில்லாத இசைக் கல்லூரி என்ன இசையைத் தரப்போகிறது? அதுவசையே" என்று சொன்னார். 1936-ல் திருவண்ணாமலையில் சைவசித்தாந்த மாநாட்டின்போது கண்டேன். 1938-ல் வெள்ளி விழாவின் போது சா. சோமசுந்தர பாரதியாரிடம் சொல்லியதன்பேரில் இவண் வந்தேன்.

சங்கத்திற்கு நாளும் இருமுறை வருவார். தமிழுக்கு இன்னின்னது செய்யவேண்டும் என்றுசொல்லுவார். தமிழ்ப் புலவர்களின் தலைவராக வாழ்ந்தார். 1938-ல் ஞானியாரடிகள் தலைமைதாங்கத் "தமிழவேள்" என்றபட்டம் புலவர் பெருமக்களால் கொடுக்கப்பட்டபோது, "நான் வெள்ளி விழாக் காட்சியினைப் பார்க்கிறேன். பொன்விழா......... எப்படியோ? "என்று சொன்னார்.

ஒருசமயம் ஞானியாரடிகள், "நான் முருகனைத் தினந் தோறும் வழிபடும்போது த. வே. உமாமகேசுவரனும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும் நல்ல பொலிவுடன் விளங்க வேண்டும் என்று வழிபடுவேன்". என்று சொன்னார்.

இன்று தமிழை வளர்க்கின்ற பெருமை புலவர்களிடத்தே அமையவேண்டும். தமிழை வளர்ப்பவர்களைத் "தமிழுக்கு நீர் ஊற்றுகின்றபோது தண்ணீராக ஊற்றுங்கள். வெந்நீராக ஊற்றாதீர்கள்" என வேண்டுகிறோம்.

நாடிமுத்துப் பிள்ளையவர்கள் தம் ஆட்சிக்காலத்தில் தமிழ் என்றவுடன் அரசியல் வேறுபாட்டையும் மறந்து தமிழ்ப் புலவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய கட்டுகளைத் தமிழவேளுக்கு அனுப்பிவைப்பார்கள். இதற்குக் காரணம் இவரிடம் அமைந்த நிலைத்த ஒழுக்கம்தான். தமிழவேள் அவர்கள் மனைவியார் இயற்கையெய்தியவுடன் கண்ணாடியே பார்ப்பதில்லை. ஒருசமயம் "நான் மறுமுறை இன்னொரு வீட்டிற்கு மருமகனாகச் செல்ல என்மனம் நாணம் அடைகிறது" என்று சொன்னார்.

அவர் பெற்றோரையிழந்து சிற்றப்பா வீட்டில் வளர்கின்றபொழுது, "பெற்றோரையிழந்த திக்கற்ற பிள்ளைகளுக்கு மாணவர் இல்லம் ஏற்படுத்த வேண்டும்" என்று சொன்னார். பழங்குடி மக்களையும் திக்கற்ற மாணவரில்லத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு ஞானியாரடிகள் சொல்லிய பிறகே சேர்த்துக்கொண்டார். நல்லதமிழில் தூயதமிழில் புலவர்களைப் பேசவைத்த பெருமை கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கே யுரியது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித் துரைத் தேவரவர்கள் தம் இறுதிக் காலத்தில் பாப்பாநாடு சமீந்தாரவர்களிடம், "தமிழ்ச்சங்கமாகிய குழந்தையை உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று சொல்லிக் கொடுத்தார்கள். அடுத்த ஆண்டே அவர் இயற்கையெய்தினர். அவரின் மறு தோற்றம் போல தமிழவேளால் இது உருப் பெற்றது.

A. T. பன்னீர்ச் செல்வம் வானவூர்தியில் மறைந்தது கண்டு, "ஏனய்யா! நான்கூட இம்மாதிரிப் போய்விடுவேனே." என்று என்னிடம் பன்முறை சொல்லியதுண்டு. "கடல் கடந்துறையும் தமிழர் வாழிடங்களுக்கு—நல்ல புலவர்களை அழைத்துச்சென்று பேசச் செய்து—பொருளீட்டி சங்கத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் சொல்வார். அவர் சிற்றன்னை மறுக்கவே அவர் செல்லவில்லை.

நாங்கள் இன்று வரையில் தமிழாலே வாழுகின்றோம். இன்னும் தொண்டு செய்யவில்லை. தொண்டு செய்யும் பேற்றை எங்கட்களிக்க வேண்டுகின்றோம். 'எங்களுடைய இறுதிக்காலத்தில் சங்கத்திலேயே தொண்டுசெய்ய வாய்ப்புக் கிடைப்பின் நலமாக இருக்கும்' என்றுகூட சில சமயங்களில் எண்ணுவோம் என்று கூறினர்கள்.

தலைவர் முடிவுரை :—

புலவர் பெருமக்களின் கருத்துக்கள் முடிவானவை. சரியென்றுகூடச் சொல்வேன். இதில் தலையிடுவது புகையிலை வியாபாரிக்குப் பொருத்தமில்லை.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் உமாமகேசுவரம்பிள்ளை தொண்டு செய்தார் எனக் குறிப்பித்தார்கள். திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நான் கூட்டினேன். அதற்கு வரவேற்புக்குழுத் தலைவராக A. T. பன்னீர்ச் செல்வத்தைத் தமிழவேள் அளித்தார். செல்லுமிடமெல்லாம், "உங்கட்குப் பணம் தேவையா? என் உதவி தேவையா?" என்று அடிக்கடி எனக்கு எழுதுவார்.

மேல் நாட்டில் "மனிதனல்—முயன்றல் முடியாதது இல்லை" என்று எழுதியிருப்பார்கள். தமிழ்நாட்டில்—முயன்றல் முடியாதது புகழ்! புகழை எவன் வெறுக்கிறனே அவனை அடையும். விரும்பினல் கிடைக்காது. புகழ் நிழல் போன்றது. "முயன்றல் முடியாதது புகழ்" என்று தமிழ்ச் சான்றோர் கண்டனர்.

நாடகம் வாழைப்பழம் போன்றது. இசைத்தமிழ் மாங்கனியைப் போன்றது. இயற்றமிழ் பலாக்கனி போன்றது. முத்தமிழுக்கும் முக்கனிக்கும் தொடர்புண்டு 'சிலப்பதிகாரத்தைப் படித்தால் அறிவியல் வருமா?' என்று கேட்பவர்கள் தமிழ்படித்தவர்களாக இருந்தால் கவலைப்படுங்கள். தமிழ் படிக்காதவர்களாக இருந்தால் ஏன் கவலைப்படவேண்டும்? என்று கூறிக் கொள்கின்றேன்.

"கோவா மலையாரம் கோத்த கடலாரம்" எனச் சிலப்பதிகாரத்தில் வரும் தொடர் எண்ண எண்ண வியத்தற்குரியது. மலைப்பொருள்களை அணிய முடியாது. கடற்படு பொருள்களை அணிய முடியும் என்று கண்டான் தமிழ்ப் புலவன் இளங்கோ. திருக்குறளை வெறுப்பவர்களை நீங்கள் வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். 10200 சொற்கள் குறளுள் உள்ளன. வள்ளுவர், கருமி எச்சில் கையையும் துடைத்துவிட்டுப்போ என்று சொல்வான் என்பதை "ஈர்ங்கை விதிரார்" என்று சொல்கின்றார்.

தன் சொந்தக் காலில் நின்று வாழ்ந்தவர் தமிழவேள். அதனால்தான் அமைச்சர்களாயினும் தவறின் கண்டிப்பார். "வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்" என்று வள்ளுவர் சொல்லுகிறார். செயல்முடிக்க வல்லது மனத்திட்பமே.

கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழியாக மாறவேண்டும் என்று நினைத்தார். வந்துவிட்டது கட்டிடங்கள் தோன்ற வேண்டும் என்று நினைத்தார். வந்துவிட்டன. அவர் மறைந்தது, பெரிது இல்லை. அவர் எண்ணங்கள் உருப் பெற்றால் போதும்.

நான் அண்ணாமலை வேந்தரிடம், "இசைஞருக்கு நல்ல தோற்றம் வேண்டும். சாரீரம்வேண்டும். பிறகு கிளர்ச்சி கவர்ச்சி உணர்ச்சி ஆகிய மூன்றும் வேண்டும்" என்று சொன்னேம். குரலில்லாதவனுக்கு இசையறிவு இருப்பின் விரலைப் பயன்படுத்தச் சொன்னேன்.

அமைச்சர்கள் எத்தனை ஆற்றல் பெற்றிருப்பினும் மொழியளவில் அவை புலவர்களுக்கே யுரியன. மொழியைப் பற்றிய கருத்துக்களைப் புலவர்களைக் கேட்டே செய்தல் வேண்டும். இப்பொழுது புலவர் கல்லூரிகளில் மாணவர்கள் தொகை குறைந்து வருகின்றது. தமிழுக்குத் தொண்டும்—ஆக்கமும் குறைவே. தமிழ் ஆட்சிமொழியாகியும் இந்நிலையென்றால் வருந்தத் தக்கது. ஒவ்வோர் அலுவலகங்களிலும் ஒவ்வொரு புலவரை நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டும். இது என்னுடைய கருத்து.

மறுமலர்ச்சி எழுத்தாளர்களிற் சிலர், "எழுதுவதற்கு இலக்கணம் தேவையில்லை" என்கின்றனர். ஒரு மொழியை, பேசுவது புரியவில்லையென்றால் 'அதைதப்படி' யென்பர் வேற்று நாட்டார். ஆனால் தமிழன் தான் அவனுக்குப் புரியும்படிப் பிறமொழிகளைக் கலந்து பேசுகின்றான். தமிழுக்கு ஊறு தமிழர்களே. தமிழ் விளங்கவில்லை யென்றால் தமிழைப் படிக்கச் சொல்லவேண்டும். ஒருமொழி வளர வேண்டு மென்றால் செத்தமொழிதான் வளர வேண்டுமே தவிர, உயிர் மொழி வளரத் தேவையில்லை.

தமிழவேள் உருவச்சிலை நிறுவ தமிழகம் உதவ வேண்டும். இப்பொழுதுள்ள கல்வியமைச்சரின் செயல்கள் முன்செய்த அமைச்சரின் செயல்களுக்கு மாறாகவே நிகழ் கின்றது. உயர்நிலைப் பள்ளிகளில் 1960-ல் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக்கியுள்ளனர். இதன் கருத்து யாது? கோவையில் தமிழைப் பாடமொழியாக்காதது நல்லறிஞர் களால் பாராட்டக்கூடியது அன்று. "காவல் நிலையம்" என்பதை மாற்றிப் "போலீசு நிலையம்" என எழுதி வருகின்றனர். இது அவரது தமிழ்ப் பற்றைக் குறைத்துக் காட்டுகிறது. இது தமிழைக் குறைக்கவில்லை. இது ஒருமைப்பாட்டுக்குப் பதில் வேற்றுமைப்பாட்டை வளர்க் கும். ஒருமைப்பாட்டை அனைவரும் ஒத்துக்கொள்வோம். ஆனால், ஒருமொழி வாழ 13 மொழிகளை அழிக்க நினைப்பது தவறு. ஆங்கிலம் பேசுவோர் ஒருமைப்பட்டிருக்கின்றனரா? இந்தி பேசுவோர் ஒருமைப்பட்டிருக்கின்றனரா? ஒருமைப் பாட்டுக்கு வழி மொழியை ஒருமைப்படுத்துவது அல்ல. இது தவறான பாதை.

படத்திறப்பு விழா என்றால் அவரது நினைவை உள்ளத் தில் திறக்கவேண்டும். அவரது பெயரை பிள்ளைகளுக்கு வைக்கவேண்டும். தமிழறிஞர்களை வாழும் காலத்தில் சிறப் புச் செய்து அறிமுகப்படுத்த வேண்டும். நல்லறிஞர்களைப் போற்ற—வாழ்த்தப் பழக வேண்டும். இதை வாழும் காலத் திலேயே செய்யவேண்டும். தமிழ் நாட்டை விட்டு வெளி நாட்டுக்குச் சென்றால் நல்லறிஞனைப் பார்க்குமாறு செய் கிறார்கள். உயிர் வாழும் அறிஞர்களைப் போற்றுவதால் அவை உயிருள்ள நாடுகளாகத் திகழ்கின்றன. செத்தபிறகு வாழ் வதால் செத்த நிலையே. சிந்திப்பன சிந்தித்துச் செய்வதைச் செய்து சிறப்பெய்து வாழுங்கள் என்றுகூறி முடித்தார்கள்.

திரு. புலவர் ந. இராமநாதன் நன்றிகூற விழா இனிது நிறைவுற்றது.

* தமிழவேள் தனிமாண்பு.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்கள் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் அரசர்க்குரிய பண்புகள் இயல்பிலே அமைவரப்பெற்றவர்; அவர், செல்வம், பதவி, ஆணை என்பவற்றிற் பிறர் எத்துணைச் சிறந்தோராயினும் அவை கருதியே அவர்க்கு வழிமொழிதலுடைய ரல்லர்; செய்தக்க செய்யாக் குறையோ, செய்தக்க வல்லன செய்யுங் குற்றமோ அவர் பாற்காணின் அவர் கண்ணெதிரே கழற்றுரை கூறித் தெருட்டு நீர்மையர்; முற்கூறிய மூன்று மில்லாரை அவையின்மை யேதுவாக மீக்கூறுதலுடையருமல்லர்; அவர்பாற் கடப்பாடறியும் பண்புடைமை காணின் அவர்க்கு வழிமொழிதலுஞ் செய்வர்; மற்று, எனக்கிது செய்கவென எக்காலத்தும் யாரொருவர் கண்ணும் யாதொன்றனையும் இரத்தலறியார்; ஒல்லுவ தொன்றனைப் பிறர் இரந்த வழி அதனை மறுத்தலு மறியார்; இன்னவாற்றால், புறப்பாட்டிலே, நம்பி நெடுஞ் செழியனைப் பேரெயின் முறுவலார் கூறிய "வலிய ரென வழிமொழியலன், மெலிய ரென மீக்கூறலன், பிறரைத் தான் இரப்பறியலன், இரந்தோர்க்கு மறுப்பறியலன்" என்னும் ஏத்துரைகள் நம் தமிழவேளுக்கும் நற்கியையுமென்க.

மற்று சால்பு என்னும் பொறையினைத் தாங்கிய தூண்களென வள்ளுவனார் தெள்ளியுரைத்த அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐங்குணங்களும் தமிழவேளை அணிசெய்யாநின்றன, "பெருமை பெருமிதமின்மை" என்னும் அறிவுறூஉக்கண்டு அவர் அடங்கினரோ, அவரது தருக்கின்மையானும் பெருமையை நோக்கி அவ்வுரை யெழுந்ததோ என்னுமாறு அவரது அடக்கம் சிறந்து திகழ்ந்தது. தெய்வப் புலவர் நட்பியலினின் மறைமுகத்தாற் கூறிய வரைவின் மகளிர், கள், சூது என்பன அவரிருந்த திசையினும் சென்றறியாதன. மற்றும்,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" "அறிவறிந்தாள் வினையின்மை பழி" என்னும் மறைமொழிகளைக் கடைப்பிடித்து, இஃது அருமையுடைத்தென்று அசாவாது, வினை செய்தலானும் இன்னுமையை இன்பமெனக்கொண்டு இடையருது முயலும் அவரது மீக்கோளும் ஊக்கமும் விளம்புதற்கரியன. அவர் அங்ஙனம் முயறற்கு மேற்கொண்ட வினை

* இவை துன்பமாலையினின்றும் [illegible]டுக்கெழுதப்பெற்றவை.

தான் தண்டமிழ் புரத்தலே. இரவன் மனையில் எழுந்த குழவியாம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் இப்பொழுது கந்தனை யனையவர் கலைபயில் கழகமும், பந்தினை யிளையவர் பயிலிடமும், மன்றமும், பொதியிலும் மருத்துக் கூடமும், ஆர்தமரற்றோர் சேர்தருமில்லமும், பட்டிமண்டபமும், பரந்த நூல் நிலையமும், பிறவுமாம் உறுப்புக்கள் திறவிதிற்பெற்ற பேராண் உற்ற பெற்றிதான் செந்தமிழ்ப் புரவலர் நந்தா முயற்சியின் வந்ததோர் பயனேயன்றோ? அவர் எவ்வுழிச் செல்லினும், யாருடன் பேசினும், யாது புரியினும் யாவும் தமிழின் பொருட்டே யாகும்.

இங்ஙனம் சிந்தையும், உரையும் செய்கையு மெல்லாம் செந்தமிழ்க் காக்கிய திண்டிறற் குரிசில் செந்தமிழ்ப் பயனும் சிவநெறி பேணுந் தவமுடையாரு மாயினர். கனிந்த அன்பின் நனைந்த வுள்ளமொடு திருப்பதி தோறும் விருப்புடன் நடந்து கண்ணுதற் கடவுளை நண்ணி வழிபடும் ஆர்வம் இவர்பால் அளவின்றுயது. ஐயாறப்பர் திருவுலாப்போதும் ஏழ்பதிவிழாவில் மெய்ப்பையின்றியும் மேலுடையின்றியும் வெம்மை மீதுறத் தண்மையின் நடக்கும் இவரது எளிய தகைமையைப் பல்லாயிரவர் பார்த்துளம் நெகிழ்வர். மற்றும், யாவர்க்கும் இன்னா செய்யாமையும், எளியார்பால் இரக்கங் கோடலும் கற்றாரைக் காதலித்தலும், நட்டாரை உயர்வு கூறலும், பெரியோரைப் பேணியொழுகலும் முதலிய இவர் பண்பனைத்தும்உரையில்அடங்குவவல்ல. சுருங்கஉரைக்கின் இவரது வாழ்க்கை ஒரு கல்விக்கூடம்; உயர்நிலை விரும்பு மொருவன் அதனிற்புகுந்து பயிறல் வேண்டும்.

ஆ! இப் பெருந்தகையாம் அருந்துணையைப் பிரிந்தேயும் இருந்தேம் யாம்! எம் அன்பிருந்த வாறென்னே!!

தம்பியா ருளங்குளிர்ந்து வித்திடத்தோன்
றிய கரந்தைத் தமிழ்ச்சங் கப்பேர்ப்
பைம்பயிரை வளர்த்துலகம் பயன்பெறற்கே
முயன்றனையப் பயனை முற்றும்
இம்பரிடைத் தமிழ்மக்கள் எய்துதல் கண்
டின்புறு தேகி னுயவ்
வும்பருல கின்பிதனிற் சிறந்ததென
வெங்ஙனநீ யுளங்கொண் டாயோ.

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

பாதிமா துடைப்பங் கனுக்கன்பினன்,
நீதிவாத நெறியி னிரம்பினன்,
ஆதிமென் மொழியாந் தமிழன்னையின்
மீதில் எல்லையில் காதல் மிகுந்தவன்;

மடமும் மன்னரும் மற்றுடைச் செல்வர்கை
விடமெலிந்து தளர்ந்ததன் தாய்மொழி
நடமிடத்துணை நல்கு பெருந்திறல்,
கெடலரும் புகழ்க் கெழுதகு கேள்வனே;

புலமை யின்றிப் புலவரைப் போற்றினன்
தலைமை கொண்ட தென் தஞ்சையூர் வாணன்முன்;
புலவனுய்த் தமிழ்ப்புரவலன் தானுமாய்
இலகு நீர்த்தஞ்சை வாணனிவ் வள்ளல்தான்;

உரன்துணை தனக்கொன்று கொண்டொருவனுய்க்
கரந்தைச் செந்தமிழ்க் கழகம் வளர்த்தவன்
நிரந்தரச் செம்மல் நிலையினினேரினும்
கரந்தும்வந்த பகைகள் கடந்தவன்;

தோன்றலு மாமகே சன்; தமிழவேள்;
சான்ற தீந்தமிழ்ச் சார்பினுக் கவ்வியம்
கான்ற வடபுலம் காண வந்தான் தமிழ்
மாண்டவீறு மறுதர நிறுவுவன்.

எஸ். சோமசுந்தரபாரதியார், *பசுமலை.*

அலைகடல்சூழ் புவியதனில் அரியதமிழ் மொழியின்பால்
ஆர்வ முற்றோர்
கலைகள்பல கற்றுணர்ந்து கடனுற்ற வெள்ளிவிழாக்
கண்ட நாளில்
தலைமையுறுங் கல்லூரி தனைநிறுவி மற்றதனைத்
தகுதி வாய்ந்த
நிலையினிற்கண் டுளமகிழ நினைத்தனையே யின்றுலகம்
நீத்த தென்னே!

தி. வை. சதாசிவபண்டாரத்தார்.